## 20–வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 03.

தேதி–06.12.2024.

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | – | S.T.C.No. 2637/2023 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா.1 |
| பெயர் | – | சிவகொழுந்து |
| தந்தை பெயர் | – | |
| முகவரி | – | |
| வயது | – | |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 06.12.2024. என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். எதிரி ஆஜர்.)

**<u>நேரம்</u>** : 2.50 மணி.

**<u>குறுக்கு விசாரணை</u>:**

1) நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த விவரங்கள் எனக்கு நினைவில் உள்ளது. எனது மகன் பற்றி முழுமையான விவரங்கள் தெரியாமல்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடைசி வரையில் எனதுமகன் வேலை பார்த்ததற்கு அவருக்கு சம்பளம் கொடுத்ததுதான் காரணம் என்றால் சரியல்ல. இதுவரையில் அவருக்கு கொடுக்கப்படவேண்டிய சம்பளம் அவருடைய கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.

2) காசோலை திருப்பப்பட்ட பிறகு எனது மகனுக்கு சேரவேண்டிய பணத்தை எதிரி அவர் வேலை செய்த நேரத்தை கணக்கிட்டு திரும்ப கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. உடல்நிலை சரியில்லாததால் காசோலை வழங்கினார் என்றாலும் அவருடைய வீட்டை விற்க ஒப்பந்தம் செய்து அதன் மூலமாக பெறப்பட்ட பணத்தை எனது மகனுக்கு சம்பளம் வழங்கி விட்டார் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு கொடுக்க வேண்டிய பாக்கி தொகை எதுவும் இல்லை என்றாலும் காசோலையை

திரும்ப பெற்று கொள்ளாததால் அதனை உபயோகித்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

20–வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை–03.